ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

15

# இலக்கியங்களில் பெண்ணியம்

**முனைவர் த.நாகம்மாள்,**
**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,**
**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,**
**கோயம்புத்தூர்- 43**
19764naga@gmail.com

ஆய்வுச் சுருக்கம்:

சங்ககால மக்கள் காதலிலும் வீரத்திலும் சிறந்து விளங்கினார்கள். சங்கப்பாக்கள் ஒவ்வொன்றும் தமிழரின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் எடுத்தியம்பும். ஒவ்வொரு மனிதனும் உள்ளத்தில் பேரன்போடு வாழ்வானாயின் இவ்வுலகம் பேறுபெற்றதாய் விளங்கும். சங்ககாலத்தில் மனிதர்களின் கோபம் எங்கே வெளிப்படுகிறது? புறத்திணையில் போர்க்களங்களில் அடிமனதில் தோன்றும் கோபத்தின் எல்லையே ஒருவரை ஒருவர் வீழ்த்துகின்றனர். பாலினப் பாகுபாடு தொடர்பான சமூகப்பண்பாட்டு வேர்களை இனம் கண்டு கொள்ளவும், குறிப்பாக பெண்களுக்கு எதிரான அடக்குமுறை, சுரண்டல் முறையை உணர்ந்து கொள்ளவும் பெண்ணியம் தெளிவான வரையரை அளிக்கிறது. குடும்பத்தின் சுமையையும் சுமக்க வேண்டும். சமுதாயத்தின் பார்வையையும் தவிர்க்க வேண்டும். கற்பு நெறியில் வாழும் பெண்கள் நல்லறத்துடன் குடும்பம் நடத்தி, விருந்தோம்பல், கல்வி பயின்று குழந்தைச்செல்வம் பெற்ற பெண்ணினம். இப்பெண்ணினத்தின் சிறப்பினை இலக்கியங்களின் வழி அறியபடுகிறது.

**திறவுச் சொற்கள்:** சங்ககால மகளிர், விருந்தோம்பல், பரத்தையர், **பெண்கள்**, **பாரதியார்,** பெண்ணினம், கற்பு நெறி,

**முன்னுரை**

சங்க கால முதல் இக்கால முதல் பெண்களின் நிலைபாட்டினை படம்பிடித்துக் காட்டுவது சங்க இலக்கிங்கள். பெண்ணியம் என்பது பெண்ணின் சமூக நிலையை மறுமலர்ச்சிக்கு உட்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. சமுதாயத்தில் நடக்கும் ஒவ்வொரு சூழ்நிலை மாற்றத்திற்கும் பெண்ணே பாதிக்கப்படுகிறாள். குடும்பத்தின் சுமையையும் சுமக்க வேண்டும். சமுதாயத்தின் பார்வையையும் தவிர்க்க வேண்டும். பரத்தையர், கணிகையர், காமக்கிளத்தியர் என்ற குலத்திலே பிறந்து தங்களின்வாழ்க்கையில் திருப்பம் காணத்துடிக்கும் பெண்ணினம். சங்ககாலப் பெண்களின் உயர்வு தாழ்வை வெளிப்படுத்த முற்படுகிறது. இவற்றைத் தொல்காப்பியம், சங்கஇலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள், நவீனஇலக்கியங்கள் வழி பெண்ணியச் சிந்தனைகளை முன்வைத்து இக்கட்டுரைப் அமைகிறது.

**சங்க இலக்கியத்தில் பெண்ணியக்கூறுகள்**

தமிழ் இலக்கியத்தின் தொன்மையான நூல்களில் ஒன்றான தொல்காப்பியம் ஆண்களின் நிலை குறித்து,

*“பெருமையும் உரனும் ஆடூஉ மேன”*

என்று பெருமையும், வலிமையும் ஆணுக்குரிய பண்புகளாகவும்,

*“அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்*
*நிச்சமும்   பெண்பாற் குரிய”*

இவை பெண்ணுக்குரிய பண்புகளாகவும் சொல்லப்பட்டுள்ளது. அதாவது அச்சம், மடம், நாணம் இவையெல்லாம் பெண்ணுக்குரிய குணங்களாக தொல்காப்பியம் கூறுகின்றது. மேலும் “கற்பு” என்பது பெண்ணிற்கு கட்டாயமாக்கப்படுகிறது. பெண்களின் உரிமை சங்ககாலத்தில் தடை செய்யப்படவில்லை. பெண்கள் கல்வி கற்று, நன்கு புலமை பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்.

**பெண்ணினம்**

*‘‘அச்சமும் நாணும் மடனும்முந் துறுதல் நிச்சமும்*
*பெண்பாற்கு உரிய என்ப’’*

பெண்களுக்கு அச்சம், மடம், நாணம் என்ற மூவகைப் பண்புகள் இருக்க வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். அச்சம் - பெண்களின் மனதில் குறிப்பின்றித் தோன்றும் நடுக்கம். நாணம் - பெண் தன்மைக்குப் பொருந்தாத செயல்களில் ஒதுங்கி இருப்பது. மடம் - மனதால் புரிந்தும் புரியாமல் இருத்தல். பெண்ணினம் பண்பாலும் நெறியாலும் சிறந்தவர்கள். இவ்வுலகம் தழைக்க மக்களைப் பெற்றுக்கொடுத்தவர்கள். பெண்ணினம் இல்லையாயின் மனித இனமே இல்லா ஒன்றாகியிருக்கும்.

**திருக்குறள் வழி அறியலாகும் பெண்ணியம்**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் பெண்ணியம் பேசுகிறது. அஃதாவது,

“மனைத் தக்க மாண்புடையாளாகித் தற்கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை”            (குறள்)

என்கிறது. அதாவது குடித்தனத்துக்கு ஒத்த பெருமையுடையவளும், தன் கணவனுடைய வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்கிறவளுமான மனைவியே சரியான வாழ்க்கைத் துணைவி என்கின்றார் வள்ளுவர்.

**கல்வி நெறியில் பெண்கள்**

சங்க காலத்தில் நச்செள்ளையார், நன்முல்லையார், ஆதி மந்தியார், நப்பசலையார், ஒக்கூர் மாசாத்தியார், காவற்பெண்டு, நக்கண்ணையார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தை, பொத்தியார், பேய்மகள், இளவெயினி, வருமுலையாரித்தி, வெண்ணிக்குயத்தியார், வெள்ளிவீதியார், பாரி மகளிர்கள், காமக்கண்ணியார், முடத்தாமக்கண்ணியார், பொன்முடியார், காக்கைப்பாடினியார், ஔவையார் போன்ற பெண்பால் புலவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியுள்ளனர். அவர்களின் செருக்கு பற்றிக் கூறும்போது.

*‘‘வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கைப்*
*பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!*
*கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி*
*தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?*
*அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,*
*எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே’’* (புறம்)

எனக் குறிப்பிட்டுள்ளனர். என்னிடம் புலமை இருக்கிறது. நான் எந்த ஒரு மன்னனையாவது புகழ்ந்து பாடிப் பரிசிலைப் பெற்றுவிடுவேன். நெடுமான் அஞ்சியைப் பற்றி எனக்குத் தெரியாதா? என்னைப் பற்றி நெடுமான் அஞ்சிக்குத் தெரியாதா? நீ இல்லையென்றால் என்ன? எனக்கு எந்த திசைச் சென்றாலும் சோறு கிடைக்கும் என ஔவையார், அதியமானிடம் கேட்பதிலிருந்து பெண்களுடைய உயர்வை சங்ககாலத்தில் நலமாக உள்ளது என அறியலாம்.

**நல்லறமே இல்லறம்**

ஒவ்வொரு பெண்ணுக்கும் திருமணம் தவிர்க்க முடியாதது. தன்னைத் திருமணப் பந்தத்திலே ஈடுபடுத்தி வாழ்க்கையை முழுமை ஆக்குகின்றாள். அக்கால மகளிரும் தனக்கு வாய்க்கும் கணவன் வீரம் உடையவனாகவும், அஞ்சா நெஞ்சம் உடையவனாகவும் இருக்க வேண்டுமென விரும்பினர். காளையை அடக்கும் வீரர்கள், வட்டக்கல் தூக்கும் வீரர்களுக்கே தங்கள் மனதினைப் பறிக்கொடுத்தனர். வீரம் இல்லாத ஆண்களை வேண்டாம் என ஒதுக்கினர்

*''கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்*
*புலலாளே, ஆயமகள்*
*அஞ்சார் கொலைஏறு கொள்பவர் அல்லதை,*
*நெஞ்சினர் தோய்தற்கு அரிய - உயிர்துறந்து*
*நைவாரா ஆயமகள் தோள்'' (கலி)*

கலித்தொகை தலைவி மறுபிறப்பும் கூட அந்த வீரமற்றவனைத் திருமணம் செய்யமாட்டேன் என்கிறாள். சங்க இலக்கியத்தில் ஒத்த வயதுடைய தலைவனும் தலைவியும் காதல் கொண்டு திருமணம் செய்யலாம் என்கிறது. தொல்காப்பியர்,
இதனை;

''பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வோடுதிரு என
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே''

என பத்து வகையான ஒழுகலாறுகளைக் கூறிச் செல்கின்றார்.

**நவீன இலக்கியத்தில் பெண்கள்**

மேலை நாடுகளில் தோன்றிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஆகியன இந்தியாவில் ஆங்கிலக்கல்வியின் வரவால் அறிமுகம் செய்யப்பட்டது. இவற்றை இலக்கியங்கள் எடுத்துக்காட்ட முனைந்த போது தான் பெண்முன்னேற்றமும் முளைவிடத் தொடங்கியது. தமிழில் முதன்முதலில் எழுந்த புதினம் வேத நாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்'(1879). அந்நாவலைத் தொடர்ந்து வந்த மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்'(1898) என்ற இவ்விரண்டு நாவல்களும் பெண்கல்வி, விதவை மறுமணம், முதலியவற்றைப் பற்றி பேசுகின்றது. "தமிழின் முதல் நாவலாசிரியராகத் திகழ்வதற்கு முனிசீப் வேதநாயகம் பிள்ளையிடத்திருந்த தகைமைகள் பெண் விடுதலை இயக்கம், சன்மார்க்க நெறிப்பிரச்சாரம், சமூக சீர்திருத்தம் போன்ற துறைகளில் அவருக்கிருந்த ஈடுபாடு ஆகியவை வேத நாயகம் பிள்ளையின் பெண் விடுதலை உணர்வைத்

தோற்றுவிக்கக் காரணிகளாக இருந்தன” என்று கா.சிவத்தம்பி கூறுகின்றார்.

**பெரியார்**

பெண் விடுதலை குறித்து எழுந்த சீர்திருத்த இயக்கங்களில் பெரியாரின் சுயமரியாதை இயக்கமானது பெண் என்பவள் ஆணின் போகப் பொருள் என்பதை மறுத்து, ஆணின் பாதி என்பதை மாற்றி பெண்ணினம் தன்னை முழுமையாகப் புரிந்துகொள்ள உதவி செய்தது. பெரியாரை “தமிழ் இலக்கியப் பெண்ணிய முன்னோடி” எனக் கூறலாம். அவர்,

“பெண்களைக் கணவனுக்கு நல்ல பண்டமாக மாத்திரம் ஆக்காமல், மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றவும், புகழ் பெறும் பெண்மணியாகவும் வேண்டும். பெண்ணும் தன்னை பெண்ணினம் என்று கருத இடமும் எண்ணமும் உண்டாகும்படியாக நடக்கவே கூடாது. நமக்கும், ஆணுக்கும் ஏன் பேதம்? ஏன் நிபந்தனை? ஏன் உயர்வு தாழ்வு? என்ற எண்ணம் ஒவ்வொரு பெண்ணுக்கும் எழவேண்டும். ஏனெனில் பெண் என்பவள் வெறும் போகப் பொருளாக ஆக்கப்படுதல் கூடாது. அவர்கள் புது உலகைச் சித்தரிக்க வேண்டும்” என்றெல்லாம் பெரியார் தம்முடைய பொதுவுடைமைச் சிந்தனைகளாக வலியுறுத்தியவர்.

பாரதி, பெரியார் மட்டுமல்லாது இன்னும் பல அறிஞர்களும் கவிஞர்களும் பெண் முன்னேற்றத்திற்காகவும் பெண் கல்விக்காகவும் பாடுபட்டனர். சங்ககாலத்தில் பெண்களின் நிலை குறித்தும் அவளின் கல்வி, வாழ்க்கைமுறை, ஆண்கள் பெண்களை எவ்வாறெல்லாம் நடத்தினர் என்பது, பெண்களை இலக்கியங்கள் எவ்வாறெல்லாம் சித்தரிக்கின்றன என்பது பற்றியும் பெண்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்டவர்கள் .

**தொகுப்புரை**

- சங்ககாலத்தில் மூவகை மகளிர்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.
- ஒவ்வொரு கால நிகழ்வுகளிலும் பெண்களின் வாழ்வானது அலைக்கழிக்கப்படுவதும், தூக்கி எறியப்படுவதும் வாடிக்கையாகவே இருக்கிறது.
- குடும்பத்தில் உள்ள பெண்கள் பிரச்சினைகளை எதிர்கொள்வதும் பரத்தையர் போன்ற பெண்கள் வாழ்க்கையே பிரச்சனையாக எதிர்கொள்ளவும் தயாராகின்றனர்
- பாரதி, பெரியார் மட்டுமல்லாது இன்னும் பல அறிஞர்களும் கவிஞர்களும் பெண் முன்னேற்றத்திற்காகவும் பெண் கல்விக்காகவும் பாடுபட்டனர்.
- தாய் வழி சமூகத்தில் பெண்ணுக்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டதால் விவசாயம் முதல் கல்வி ஈறாக அனைத்து துறைகளிலும் தன் திறமையை வெளிப்படுத்துகின்றது.
- சங்கஇலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள், நவீனஇலக்கியங்கள் வழி பெண்ணியச் சிந்தனைகளை குறித்து அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. சங்ககால மகளிர், டாக்டர் சி.பாலசுப்பிரமணியன், பாரிநிலையம், சென்னை, முதற்பதிப்பு: டிசம்பர்-1983
2. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், டாக்டர்.கே.கே.பிள்ளை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. மறுபதிப்பு: 2000
3. எட்டுத்தொகையும் தமிழர்பண்பாடும், சாமி.சிதம்பரனார், அறிவுப்பதிப்பகம், சென்னை. இரண்டாம் பதிப்பு-ஜூலை 2008

**அடிக்குறிப்புகள்:**

1. ஈ.வெ.ரா. பெரியார் – சுயமரியாதைத் திருமணம் ஏன்?, பக்:12

**மேற்கோள் நூல்கள்:**

1. பாரதியார் கவிதைகள் – கழக வெளியீடு
2. முனைவர் அரங்க.மல்லிகா – தமிழ் இலக்கியத்தில் பெண்ணியம்